# நவம்பர் – 30 – வியாழன்

### திருச்சீடர் புனித அன்ட்றூ

**ஆண்டவரின் நியமங்கள் சரியானவை: அவை இதயத்தை மகிழ்விக்கின்றன. திபா. 19:8**

## முதல் வாசகம் : உரோமையர் 10 : 9 – 18

சகோதர சகோதரிகளே! ”இயேசு ஆண்டவர்” என வாயார அறிக்கையிட்டு, இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூர நம்பினால் மீட்புப் பெறுவீர்கள். இவ்வாறு உள்ளூர நம்புவோர் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவர் வாயார அறிக்கையிடுவோர் மீட்புப் பெறுவர். ஏனெனில், ”அவர் மீது நம்பிக்கை கொண்டோர் வெட்கத்திற்கு உள்ளாக மாட்டார்” என்பது மறை நூல் கூற்று. இதில் யூதர் என்றோ கிரேக்கர் என்றோ வேறுபாடில்லை அனைவருக்கும் ஆண்டவர் ஒருவரே. அவரை நோக்கி மன்றாடும் யாவருக்கும் அவர் அளவற்ற நலன்களைப் பொழிகிறார். ”ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிறவர் எவரும் மீட்புப் பெறுவர்” என்று எழுதியுள்ளது அல்லவா? ஆனால் அவர்மீது நம்பிக்கை கொண்டிருந்தாலன்றி, அவர்கள் எவ்வாறு அவரை நோக்கி மன்றாடுவார்கள்? தாங்கள் கேள்வியுறாத ஒருவர்மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்? அறிவிக்கப்படாத ஒன்றுபற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள்?. அனுப்பப்படாமல் அவர்கள் எவ்வாறு அறிவிப்பார்கள்? இதைப்பற்றியே, ”நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன” என்று மறைநூலில் எழுதியுள்ளது. ஆயினும் எல்லாருமே நற்செய்தியை ஏற்றுக் கொள்ளவில்லை இதைக் குறித்தே எசாயா, ”ஆண்டவரே, நாங்கள் அறிவித்ததை நம்பியவர் யார்?” என்று முறையிடுகிறார். ஆகவே அறிவிப்பதைக் கேட்டால்தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக் கேட்க வாய்ப்புண்டு. அப்படியானால், அவர்கள் கேள்விப்படவில்லை என்று சொல்ல முடியுமோ? எப்படிச் சொல்ல முடியும்? ஏனெனில், ”அவர்களது அறிக்கை உலகெங்கும் சென்றடைகின்றது அவர்கள் கூறும் செய்தி உலகின் கடையெல்லைவரை எட்டுகின்றது.”

**பதில்பாடல் :** படைப்புக்களின் அறிக்கை உலகெங்கும் சென்றடைகின்றது

## நற்செய்தி : மத்தேயு 4 : 18 - 22

அக்காலத்தில், இயேசு கலிலேயக் கடலோரமாய் நடக்கும்போது, சகோதரர் இருவரைக் கண்டார். ஒருவர் பேதுரு எனப்படும் சீமோன், மற்றவர் அவர் சகோதரரான அந்திரேயா. மீனவரான அவ்விருவரும் கடலில் வலைவீசிக் கொண்டிருந்தனர். இயேசு அவர்களைப் பார்த்து, ”என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்” என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள். அங்கிருந்து அப்பால் சென்றபோது வேறு இரு சகோதரர்களைக் கண்டார். அவர்கள் செபதேயுவின் மகன் யாக்கோபும் அவர் சகோதரரான யோவானும் ஆவர். அவர்கள் தங்கள் தந்தை செபதேயுவுடன் படகில் வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருந்தார்கள். இயேசு அவர்களையும் அழைத்தார். உடனே அவர்கள் தங்கள் படகையும் தந்தையையும் விட்டு விட்டு அவரைப் பின்பற்றினார்கள்.

**தியானம் :** நவம்பர் மாதத்தின் இறுதி நாளில் கால் பதித்துள்ள நாம், இந்த நல்ல நாள் வரைக்கும் எம்மைப் பாதுகாத்துப் பராமரித்த இறைவனுக்கு நன்றி கூறுவோம். இன்றையநாளில் இறைமகன் இயேசுவின் திருச்சீடர்களில் ஒருவரான புனித அந்திரேயாவை (Andrew), அன்னையாம் திருச்சபை நினைவுகூருகின்றாள். தலைமைச் சீடர் பேதுருவின் உடன்பிறப்பான புனித அந்திரேயா திருமுழுக்கு யோவானின் சீடர்களில் ஒருவராவர். இன்றைய நற்செய்தியில் இறைமகன் இயேசு தமது முதல் சீடர்களை அழைத்ததனை நாம் அவதானிக்கலாம். சந்திரனுக்கும் அப்பால் சென்று வாழத்துடிக்கும் எமக்கு இற்றைய நற்செய்தி எட்டிக்காய் எனக் கசக்கலாம். வீண்பகட்டு வாழ்க்கையை வெறுத்து தம்மைப் பின்செல்ல விரும்பும் ஒவ்வொரு வரையும் “என் பின்னே வாருங்கள்” (மத்தேயு4:19) என்று மட்டுமல்ல, “மனிதர்களைப் பிடிப்பவர் ஆக்குவேன்” (மத்தேயு4:19) என்பதனை இன்றைய நற்செய்தியில் இறைமகன் இயேசு தெளிவாகத் தெரிவிக்கின்றார். இவ்வுலக செல்வம், சுகபோக வாழ்வை துறந்து எவ்வாறு இறைமகன் இயேசுவைப் பின்பற்றலாம்? என நாம் சிந்திக்கலாம். ஆதிக் கிறிஸ்தவர்கள், அல்லது முதல்சீடர்கள், மற்றும் அன்னை மரியாள் ஆகியோர் எவ்வாறு கிறிஸ்துவைப் பின்பற்றினார்கள்? என்பதனை நாம் எமது கண்ணெதிரே காணாவிடினும், நாம் வாழும் இக்காலத்தில் எம்மிடையே வாழ்ந்து இறந்துபோன திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர், அன்னை தெரேசா ஆகியோர் எமக்குத் தெரியாதவர்கள் அல்ல. கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பது எமது சுயத்திற்கு நாம் மரித்து, நான் என்ற வரட்டுக் கௌரவத்திலிருந்து கீழே இறங்கவேண்டும். பிறரது நல்வாழ்விற்காக எமது வாழ்க்கையை விட்டுக்கொடுத்து தியாகங்கள் செய்யவேண்டும். எமது வாழ்வின் சிறிய நேரத்தையாவது, எமது உழைப்பின் ஒருபகுதியையாவது பிறருக்காக கொடுக்க முன்வரவேண்டும். எமக்கென வாழாது பிறருக்கென வாழவேண்டும். நன்கு பழக்கப்பட்ட வாழ்க்கையை விடுவதென்பது மிகவும் கடினமானது. எனினும் அக்கேவலமான, கீழ்த்தரமான வாழ்விலிருந்து வெளியே வருமாறு இன்றைய நற்செய்தி அழைப்பு விடுகின்றது. அந்த அழைப்பை நாமும் ஏற்றுக்கொள்வோமா? இறை மகன் இயேசுவாலே தொடப்பட்ட இறை பணியாளர்கள் போன்று நாமும் தொடப்பட வரம் வேண்டுவோம்.